**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**

O.S. No.63/2024

சாட்சி : PW1

பெயர் : கலைச்செல்வி தேதி: 19.01.2026

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-</u>**

எனது அப்பா யார் யாருக்கு வட்டிக்கு கடன் கொடுத்திருந்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. எனக்கு 2, 3 பிரதிவாதிகள் ரூபாய் 17 லட்சமும், 2ம்வாதிக்கு ரூபாய் 20 லட்சமும், 21.09.2021 அன்று தருவதாக ஒப்புக்கொள்ளப்பட்டதாக சொல்லியிருந்தேன் என்றாலும், அதற்கு எழுத்து மூலமாக ஏதாவது எழுதிக் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. என் வீட்டிற்கும் தாவா சொத்திற்கும் இடையே 2 கிலோமீட்டர் தூரம் இருக்கும். 4ம்பிரதிவாதி தாவா சொத்தை அளவீடு செய்ததாக அறிந்து நான் சென்று கேட்டேன். 4ம்பிரதிவாதி ஜீவிதா சொத்து வாங்கிய விவரம் அளக்கும் பொழுது தான் தெரியும். வாதிகளும், 2, 3 பிரதிவாதிகளும் பாகப்பிரிவினை எழுதிய விவரம் எனக்குத் தெரியாது. தாவா சொத்து சுமார் 1 அல்லது 2 கோடிக்கு மேல் மதிப்புடையதாகும். சரியாக தெரியாது. தாவா சொத்து பலகோடி மதிப்புடையது என்பதால் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதில் எனக்கு எந்த பங்கும் தராததாலும் மதிப்புமிக்கது என்பதாலும் தாவாவை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் ஒருபகுதி மகுடஞ்சாவடி நகரின் மத்தியில் உள்ளது என்று சொன்னால் சரிதான். ஜீவிதா அந்த இடத்தை அளந்த போது தான் தெரியவந்தது. மகுடஞ்சாவடில் உள்ள இடம் காலிமனை தான். கடைகள் அம்மா பெயரிலும், மனைகள் அப்பா பெயரிலும் இருந்தது. தாவா தாக்கல் செய்ததிலிருந்து எனக்கும் அப்பாவிற்கும் பேச்சுவார்த்தை இல்லை. எனது

கணவர் வங்கியில் கிளார்க்காக பணிபுரிந்து வந்தார். வாதிகளுக்கும் 2, 3 பிரதிவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் என் கணவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். அது பாகப்பிரிவினை பத்திரம் என்று தெரியாமலேயே கையெழுத்து போட்டுவிட்டார். பாகப்பிரிவினை பத்திரம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்று எனக்குத் தெரியாது. தாவா சொத்து காலியாகத் தான் உள்ளது. விவசாயம் எதுவும் செய்யவில்லை. 4 ம்பிரதிவாதிக்கு 2, 3 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கிரய பத்திரம் செல்லத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. 4 ம்பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த விவரம் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தெரியும். வாதிகள் 2, 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு 2, 3 பிரதிவாதிகள் பாகப்பிரிவினை ஏற்பட்ட காரணத்தினால் பதில் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. பாகப்பிரிவினை பத்திரமான வா.சா.ஆ.9 அமுலுக்கு வந்து விட்டது என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை முடிந்த பிறகு 2, 3 பிரதிவாதிகள் வருவாய்துறை ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. பாகப்பிரிவினைக்கு பிறகு தாவா சொத்துக்களின் மதிப்பு உயர்ந்து விட்டதால் 2, 3 பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்க வேண்டி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**4 ம் பிரதிவாதி தரப்பில் 1 முதல் 3 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளவதாக பரிந்துரைக்கப்பட்டது.**

ஓம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.